திருமுட்ட

நான்மணிமாலை.

48

ந. சுப்பராயப்பிள்ளை,

தெ. விருதாக்கன்.

Ф22:417
N29
150513

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருமுட்ட

நான்மணிமாலை.

தெற்குவிருதாங்கன்

ந. சுப்பராயப்பிள்ளையால்

இயற்றி

சிதம்பரம்

ஸ்ரீபுண்டரீகவல்லி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது

1929

ஆசிரியர் துதி

முந்துமறை யோதுகுல முப்புரிநூன் மார்பினான்
செந்தமிழ் தேர்வான் செறும்புலனின்—மைந்தவித்தான்
செவ்வழியா ஊனவநலூர்ச் சீனிவா சன்றமியே
னுய்வழியா விக்கருள்வா னாற்று

ஸ்ரீ

சிறப்புப்பாயிரங்கள்.

மாயவரம்தாலூகா ஐவநல்லூர் பிரம்மஸ்ரீ பிச்சுவய்யர் அவர்கள் குமாரரும், கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் தமிழாசிரியரும், இந்நூலியற்றியாரது ஆசிரியருமாகிய பிரம்மஸ்ரீ பி. சீனிவாஸய்யரவர்கள் இயற்றியது.

(ஆசிரிய விருத்தம்)

சீர்படைத்த நிலவுலகஞ் செழிக்கத் தானே
சிறப்புறவே தோன்றிவளர் சீமுட்டத்தின்
நார்படைத்த வேனவுரு நாரணற்கு
நான்மணிமாலையென்னு நற்பா மாலை
யேர்படைத்த செந்தமிழி னினிதாச் செய்தா
னெழில்வேளாண் குலதிலகன் சுப்பராயப்
பேர்படைத்தான் றெற்குவிரு தாங்க னென்னும்
பெரும்பதியான் றமிழ்பயின்ற பெருமையோனே

கலியமலை

ஸ்ரீமாந் ந. சந்திரசேகரநாயகரவர்கள்
இயற்றியது.

பொன்னமர் சீமுட்டப் பூவரா கன்றனருள்
மன்னு திருநான் மணிமாலை—சொன்ற
னுளந்திகழு நட்பி னுயர்சுப்ப ராயன்
வளந்திகழ வாழ்க வவன்.

தில்லைத்திருச்சித்ரகூடம்

ஸ்ரீமத் ராமாநுஜதரிசன வித்யாசாலையின் தலைமையாசிரியர்

வித்வான், **ஸ்ரீமாதவநாயுடு** அவர்கள் இயற்றியது

பொற்குவி நிவாவினான் மணிமாலை புனைதல்புரி
பூமுட்டமா முட்டமார்

சொற்குவிரி சீர்வராகற்குநான் மணிமாலை
சூட்டினான்றுறைபல நிறீஇ

நெற்குவிரு தாங்கணிமிர் வீரநா ரணநாம
நீரேரியாற் பொன்னிசெய்

தெற்குவிரு தாங்கனதி மைந்தனங் தமிழ்வளங்
தெரிசுப்பராய னினிதே.

முகவுரை.

கடல் விளிம்புடுத்த அவனியின்புடை யைம்புல வுணர் வொடும் மனவுணர்வினாற் "றக்கவின்ன தகாதன வின்ன வென்—றொருக்க வுன்னி" யுய்தற் குதவியாகிய மாநுட வுடற்பிறவியிற் படுத்திய விறைவனது திருவருளை வியந்து, அர்த்தபஞ்சகத் தறிவொடு மப்பரம்பொருளை வாழ்த்தி வணங்குதலே அந்தமிலின்பத் தழிவில் வீடடைவார்க்கியன்ற ஆறு ஆகும்.

எனவே, அவ்வாழ்த்துத்தான் உரையும் பாட்டுமென விருகூற்றா யுணர்வுடைய பலரானும் போற்றப்பட்டு வழங்குமடிப்பாட்டிற் கியையத், தேவபாடாண்டிணையுட் கந்தழி வாழ்த்தாகி "வழக்கொடு சிவணிய வகைமையான" என்ற ஆசிரியர் தொல்காப்பியராணையினடங்கும் பிரபந்தவகைகளுளொன்றாய், புதிதாகத்தொடுக்கப்படும் தொடர் நிலைமேற்றாதும் "விருந்து" என்னும் வனப்பு வாய்ப்ப, வெண்பா கலித்துறை ஆசிரியவிருத்தம் ஆசிரியமென்னும் பாவினும் பாவினத்தினும் பயின்று முதற்பாட்டினிறுதிவரும்பாட்டின் முதலாகத் தொடுக்கப்படுமந்தாதித் தொடையான் மண்டலித்து முடிந்து நான்மணிமாலை யென்னும் பெயர்பெற்றுப் பாட்டினுட்பட்ட திவ்வாழ்த்தென்பது.

குற்றங் களைந்து குறைபெய்து கொள்ளுதல்
கற்றறிந்த மாந்தர் கடன்

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

திருமுட்ட நான்மணிமாலை.

சடகோபர் துதி.

வெண்பா.

பத்திக்கு வீறுபெறும் பண்பார் தமிழ்மறையை
யெத்திக்கு முய்ய வினிதளித்தோ—யத்திக்
கருண்முட்ட வாராக னஞ்சீர் பரவற்
கொருமுட்டும் வாராம லுன்.

எம்பெருமானார் துதி.

வெண்பா.

இறைமயக்க மாய விருணீத்து நெஞ்சே
மறைமயக்கே னேரு மறிய—முறைவிளக்கு
மாழிவளா கத்தாழி யான்றெய்வ மென்னுமொளி
வாழியிரா மாநுசன்ருள் வாழ்த்து.

கலைமகள் துதி.

வெண்பா.

விளரி யளிமுரலும் வெண்போ தகத்துத்
தளிரியல்பூந் தாண்மத்துத் தாழாக்—கிளரியசீர்ச்
செந்தமிழ்கொ ளின்னமுதஞ் சேர்ந்தெழுவோனுட்டுதுமால்
புந்திவெண்பா லாழி புரிந்து.

நூல்.

வெண்பா.

பூமேவு தேவும் புரந்தரனுந் தேறரிய
மாமேவு சீமுட்ட வாராக—பாமேவு
மாழ்வா ரமுதமொழி யார்ந்த வருஞ்செவிக்கென்
ருழ்வார் மொழியோ தகும். (க)

கட்டளைக்கலித்துறை

தகுதி யிவையிவை தக்கதன் றென்னான் றரணிமுற்றும்
பகுதி யுறக்கொடு பாதலம் புக்கோன் பரந்துகெட
விகுதி யுறப்பெரு வெள்ளேன மாயவன் வீறடிக்கன்
புகுதி கொளக்கிளர் சீமுட்ட நண்ணியான் போற்றினனே

ஆசிரியவிருத்தம்

எய்ந்தகடற் றிரைசிறுக வெண்ணில்லாத் துயர்காட்டு
மிவ்வுடம்பாம்
வாய்ந்தசிறைப் பட்டதனை வாயிலின்மாட் டேகாது
வருந்து கின்ற
சாய்ந்தவறி வின்முதிய னாயிடினுஞ் சதுர்மறைகள்
போற்றுஞ் செவ்வி
வாய்ந்தபெயர்ச் சீமுட்ட வாபாக நின்கழல்கள்
வணங்கி னேனே. (௨)

ஆசிரியப்பா

வழுத்தினன் வருகை காணிய விழுத்த
மரைமா தசநெகிழ்ந் தறைமுகிழ் முகத்தி
னிதழ்மை பரப்பி யின்கணீ ரிறைக்கும்
பன்மலர் வாவியின் பரந்தகொம் பலர்மாட்
டளியின முரான்று துளிநறா வருந்த
மாக்குயில் கூவ மடமயி லாடப்
புள்ளொடு விலங்கினம் பொதுவராய் நோக்க
அந்தமில் காட்சி யரசுவீற் றிருந்த
வெயில்புக் கறியா விழுத்தண் சோலையு
நான்மறை யோதி மூன்றுதீ வளர்க்கு

மிருபிறப் பாள ரொருபெருந் தெருவு
மாலய வீதியு மாவண மறுகு
மேனைய ரிருப்பு மிரவியு மிந்துவுங்
கதிநெறி காணாது கலங்கி யிலங்கிய
சேணோங்கு புரிசையின் மாண்கோ புரங்களு
முறைபுறக் குலாஅய முட்டநன் னகர்க்கண்
பூமாது மாமாது
மிருபுறனு மருகுறவே
தவமுனிவர் பலர்பணிய
வரும்புலவர் மருங்குதொழ
விதியொடரி துதியயற
கருங்காரின பெருங்கருணைத்
திறங்காட்டி யரங்கேறி
யிருங்கோலத் தருங்கோல
முலகுய்ய நிலைநிறுவிய
மறையுச்சி யுயர்தேவே
புறவொன்றின் பொருட்டாகத்
துலையேறிய நிலைபயின்ற
வருணிறைந்த தெருண்மனத்தான்
செஞ்ஞாயிறின் வழித்தோன்றிய
புவிபோற்றுஞ் சிவியென்னப்
பேரிசையானே பன்னூ லுரைக்கு
மவனே, சம்ப ரப்பெய ரந்தண னாகி
யொன்றிய வுளத்தொ டுன்னடி பணிந்து
செல்வக் காலையு மல்லற் காலையுஞ்
சிதையா னடிமை செய்ததற் குவந்து
வள்ளனீ யருளிய வரத்தா னன்றோ
புலவரும் பாடும் புகழோ னாயின

னினைவுபிறி தின்றி நிச்சலு மென்னைப்
பரவுவார்க் குச்சுகம் பண்ணுவல் யானெனப்
பார்த்தற் கருளிய சீர்த்த மொழியின்
பொருளை யெம்மனோர்க் கறிய விளக்கினை
யானே, கருவூர் வதிந்தனன் கிளம்பி மறுவூர்
சேறற்கு விரைஇய செல்லலோன் றுடையே
னரை திரை மூப்புச் சாக்காடு நண்ணிய
வுடற்சக டிவர்ந்தே யுய்க்குங் கோளினன்
பல்லூழி காலமாய்ப் பயின்றவிச் செல்லற்
கெழுவா யிறுவா யறிகில னெனினு
மிதனிடை வாய்ந்த வியம்பக் கேணீ
பிறப்பி றப்புக ளறப்பல நிகழ்ந்தன
பொய்யுடற் பண்டிகள் பலவாய்ப் பொருந்தின
வுண்ணுவ வுடுப்ப வெண்ணுவ விசைப்ப
பார்ப்ப விவையெலாம் பார்க்கின்வே றிலையாங்
மெய்வாய்கண் மூக்குச் செவியென மேவிய
கள்வரா னட்பராற் கரையிலாப் பாவப்
பண்டங் கொள்ளை கொண்டன னையா
வெற்குயிர் நண்பனு வியங்குறு மனமெனு
மாயக் குரங்கா னுயதீ வினைகட்கு
மலையையோ வன்றி மறிதிரைப் புனலையோ
மாதர்சிந் தையையோ மற்ற வற்றையோ
வுவமை யாக்கொண் டுரைப்பேன் பெரும
தையலார் திறத்தின் றரணியின் றனத்தி
னுதரித் தெழுந்த வவாக்கோட் பட்டே
னுவரி பொத்தியே மேவிய புலிபோற்
புன்மை யொழுக்க மகத்திற் பூண்டன
னீயே, யிறைவ னுதவி னிவ்வெலா மறிதி

பெற்றோர் தம்மகார் பிழைத்தவை போக்கி
முதுநெறி யுய்க்கு மதுமுறை யாமா
லெனைத்துல குயிர்க்குநீ யிருமுது குரவரெ
டியாவரு மியாவு மாதலி னெற்கு
மன்னை யாயினை யழிவி லப்பனை
யினைய செல்லலான் வினையெனுஞ் சரக்கு
முயற்சிநனி யின்றியு முனைந்து செறிந்தவிச்
செல்லலுந் தேட்டமு மல்ல லாத
லுணர்ந்தன னுயுமா றெண்ணி யுன்னடி
போற்ற னன்றெனப் புரிதன் மேயினன்
கல்லா தவரிற் கடைப்படு நாயினே
னின்றிரு வருளா னினைத்தொழ லாயினேன்
சில்லி காவனச் சீபதி யொன்றும்
நன்னெறி யொழுகவு நயந்துனைப் பாடவும்
புன்னெறி யொழிக்கவும் புரிந்துனை வணங்கவுந்
திருவரு ணல்குதி தெய்வத்
தருநிக ரொவ்வாத் தருகை யோனே ச

வெண்பா.

கையின் மணியாழி காலிற் றிருக்கங்கை
மெய்யின் மிளிர்மலர்மா மேயவவன்—வெய்ய
கருமுட்டா தன்பரையாள் கைக்கேயே னம்மாய்த்
திருமுட்டம் நண்ணுஞ் சிறப்பு. ரு

கட்டளைக்கலித்துறை.

சிறப்புறப் பார்ப்பனச் சென்மத் தொழுக்கஞ்சிறிது மிலான்
மறக்கொடுந் தீவினைக் காட்பட்ட வம்மணி போகனும்மா
லுறத்திரு முன்ன ருஞற்றிய கூத்திற் குவந்தனனுய்ச்
சிறப்பருள் செய்தனன் சீமுட்டக் கேழற் செழுமணியே. கூ

ஆசிரியவிருத்தம்.

செழுமாமணி தங்கிய மார்பினனே
திருவாருநின் மைந்தனு மோய்விலனே
விழுகாதலி னெந்தையர் யாய்களுமே
வெகுவாகவ ருந்தினர் மாற்றுதியே
யெழுநீறென வெஞ்சிட மோதியிடே
மிபராசனு மஞ்சின னேலமெனா
முழு மாமுத லென்றெண முட்டமுளாய்
முனையா வதனுக்கரு ளார்த்தினையே. எ

ஆசிரியப்பா.

ஆர்கலி புடைசூ ழவனி முதலாய
பரந்த வெவ்வுலகு நிறைந்தபல் லுயிரு
மளப்பில வவையெலா மாக்கி யளித்துப்
பாற்றவு நின்ற பண்ணவ னீயே
சுரந்துறு மன்பின் முனிவருஞ் சுரரு
மரந்தை கெடுப்பான் விரைந்தனர் பிறரும்
வழுவாத் திறஞ்சா லெழுதாக் கிளவிவழி
வேள்வி முதலாய வியன்பெற முற்றி
வயங்கொள வுதவிய வள்ளலு நீயே
யவனவ ளதுவென வம்மூன் றாகி
யகிலவான் மாக்களு மாற்றிய வரத்தின்
பயன்புணர் விக்குமப் பரமனு நீயே
யறவுந் தெளிந்தோ ரகவிரு ளோரீஇ யவர்க்
கந்தமி லின்பவீ டருளுந னீயே
யின்மையு முண்மையு மின்மை யுண்மையு
மம்மூ வடிவுமா யவைகடந் தளப்பரு
சத்திய ஞான னந்தந் தழைக்குறூஉ

மற்புத வுருவி னமர்ந்தோ னீயே
மண்புன றீவளி மாவிசும் பாயவற்
றுண்ணிர லுறையைந் தொடுநான்கு மூன்று
மிரண்டு மொன்றுமா யெவ்வுயிர்க் குயிராய்
விழைவார் பயனாய் விளங்குந னீயே
பிறப்பிறப் பில்லா திருக்கு மொருநீ
நல்லார்ப் புரந்தவ ரல்லார்க் கடிந்து
வறநிலை யுறற்கா வையிரு பிறப்பு
முதலாப் பல்பிறப் புகந்தொறு முனாற்றிய
கருணையி னியன்றகார்க் கருங்கட லாயினை
நான்மறை பயின்ற நான்முகத் தொருவனுங்
கறைவைத்த கண்டத் திறைவனுங் காணி
னீயே யென்ன நிகழ்த்தவு நின்றனை
கண்ணகன் பூபா தலக்கண் ணுறுமெலை
நீல மேனியங் கோல வுருக்கொடு
பொற்கண னாருயிர் போக்கிப் பூமின்
னேமுற நிறுவியங் கிருத்தற் கேற்றவித்
திருமுட் டச்சீர் செப்பருங் குறைத்தே
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கியாண்டு
மெவ்வாற் றானு மியல்வதொன் றன்றா, லாயினும்
பத்திசெய் யடியரைப் பரகதிக் குய்க்கு
முத்தம னீயென வுலக முரைக்குமப்
பொருண்மொழி கொண்ட புந்தியே னாகி
யாதிரை தொடர்ந்தநின் காண்மல ரென்று
மனமொழி மெய்களின் வணங்குவன்
மனமொழி கடந்தபேர் மாண்பின னெனவே.

வெண்பா.

என்னிலைமை யெல்லா மியம்பினே னெம்பெருமா

னுன்னிலைமை சற்று முணராதே—னன்னிலைய
ரல்லார்க் கரியவனே யம்முட்டக் கேழானின்
றெல்லுருவின் சீரறியச் சொல்லு.

கட்டளைக்கலித்துறை.

சொல்லமர் காதலன் சோகத் தெனைவைத்த சூழ்ச்சியென்னே
கல்லத ரத்தமுங் கானுங் கடக்கக் கருணைசெய்து
நல்லன வல்லன வெம்மலர்க் கண்ணு நயந்துமுரல்
மல்லலம் முட்டவ ராகர்வெற் பின்னளி மாண்பையொத்தேதயே

ஆசிரியவிருத்தம்.

ஒத்தவன்பின் வேடர்நாத னுன்னையன்னை பின்னையோ
டுபசரித்து நல்குழலை யுட்கொளாது கொண்டதோ
டெழ்திறத்த விமையவர்க்கு மெவ்வெவர்க்கு மெய்தொணு
வெழுமையன்பி னுரைகணல்கி யினியதோழ னுயினுய்
முத்திறத்த தேவுமியாவு முதலுமாக நின்றவா
முத்தர்நித்த ரேத்துமுட்ட மூலவேன நாதனே
யத்திறத்த வளியையுன்னி யுன்னியென்ற னுவியோ
டத்தமங்க முன்னடிக்க ணர்ப்பணித்தெ னையனே கக

ஆசிரியப்பா.

ஏயபல் லுலகு மியாவு மியாவரும்
பாழ்படுங் காலமேற் படர்வுறும் போழ்தத்
தொருதனி வித்தா யருமுளை தோற்றி
பாசிலை யாகிப் பலனையும் படைத்து
வியனுல கெல்லாம் விளைத்து வேருகி
விளங்குறூஉ மதுவே வளங்கெழு கேழற்
படிவங் கொண்டு பலர்புகழ் முட்டத்

திருப்பதி யமர்ந்தது தொழுமின்
கருப்பொதி போகடுங் கடப்பாடீரே கஉ

வெண்பா

பாடுந் தொழிலிற் பறையடித்த னன்றென்று
நாடு நவிலவு நானயந்துன்—கேடில்சீர்
கூறத் துணிந்தேன் குணமுட்ட வாராக
ஆறின் வருபயனை யோர்ந்து கங

கட்டளைக்கலித்துறை

ஓர்கின்ற. வென்னொடு நீயும் முகப்புற வுள்ளமேநீ
யேர்குன்ற மாமையு மெய்ந்தது காதலிக் கிக்கங்குலுன்
வார்கின்ற வம்பின ளூணுந் துறந்தனள் வள்ளலிவை
யோர்கின் றிலீரென முட்டவ ராகருக்கோதுதியே கச

ஆசிரியவிருத்தம்

ஓத நின்றதிரை யுந்து பாற்கடலின் மீது நின்றவட பத்திரத்
துணர்வி னின்றுதுயி லெங்கணுதமுன மோகை பொங்கவிதியோடரி
யோத நின்றமுது மறைக ளுவினெறி யோங்க நின்றுவழி பாடிடா
வுலக முண்டபெருவாய ராக்கதரி னூறு மிக்கதது வோர்ந்தநீ
சீத னின்றவளி பம்பு கின்றவிழி வெம்பு மெங்களுழி செய்யெனு
சேரு வோர்கடச திக்கி னுங்கடவு தேரி ராசனொடு பானுவு
மாத ரத்துமிக ராம னாகி தச முகனை யூரினொடு நூறினு
யாதி யந்தமனு காதமுட்டமொளி ராதி யேனவரு வைய்னே

ஆசிரியப்பா

ஐயரி பரந்த வைவேற் கண்ணீர்
சிலமியர் குழா அத்தகஞ் சின்மொழிப் பேதை
சிற்றி லிழைத்துஞ் சிறுதே ருருட்டியு

மணியிழை திருத்தியு மணற்சோ றுக்கியும்
விருந்தினர்ப் புரந்தன ளுண்டுட னிருந்து
மருமலர் கொய்து மிரும்புனல் குடைந்தும்
பாடியு மாடியும் பயில்வுறூஉங் சாலை
யருந்தவ மிழைத்த வழகர சனைத்துந்
தன்பா லன்பா லிருக்கத் தண்ணரு
ணல்கிய திருக்கிளர் நன்மணி மார்பினன்
காமற் பயந்த சாமி நாம
மாயிர முடைய வம்மான் பாயிர
நான்மறை பரவு நாரணன் வான்மலர்
மைங்கற் கம்மறை தந்தருள் குருசில்
பொன்மலை குனித்த செம்மலை யிருந்தருள்
வெண்மலை தூக்கிய கருமலை முதனாள்
வெம்போர்க் குடைந்தங் கம்புவி நோக்கி
நின்றவக் காலை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நவின்றவற் போக்கிய
பெருங்கரு ணாகரன் பிரம மூர்த்தி
பாவந் தொலைத்திடும் பூவ ராகன்
றுனந் தமிலா வானந்த பவனத்து
முட்டநற் பதியான் மூரி வெஞ்சிறைச்
செம்மலை மேலொரு மைம்மலை யெழுந்தென
பெரிய திருவடி பிடர்மிசை யேறி
யொளிப்பொருட் கெல்லா மொளிசெயும் வதனமு
மள்பழுத் தொழுகு மம்புய விழிகளுங்
குலவரைத் தோள்களு மிலகுமைம் படைக
டுன்னிய கரங்களு மென்ன ராயினுந்
தினந்தொழு தேத்துஞ் சீபா தங்களுங்
குலாவா நிற்ப வுலாவரு மத்தைக்

கண்டனள் கைவளை விண்டாள் கண்ணீர்
வார்ந்தனள் கலைநீத்த வன்கலை பெற்றனள்
வெய்துயிர்ப் புயிர்த்தாள் மெய்ம்மயக் குற்றாள்
கோவையும் பாவையுங் குலைந்தா டுறந்தாள்
முல்லையு முலையு முகிழ்த்தில விவடா
னின்ன தன்மைய ளாயின ளித்தை
யுள்ளுந் தோறு முழையி
ரிறும்பூ துடைத்தே யிறும்பூ துடைத்தே கசு.

வெண்பா.

உடையாய் குறியெதிர்ப்பை யுன்னுத னன்றி
கடையாய வென்மாட்டுங் கண்டாய்—மடையார்
குவளை வயன்முட்டக் கோதில்வ ராகா
குவளை வகற்றுய்யக் கொண்டு கஎ.

கட்டளைக்கலித்துறை.

கொண்டா னுனக்கிணை யுண்டே யுனதருக் கொண்டவனைக்
கண்டாசை கூர்ந்தனள் காதல் கழறக் கரையிலையால்
வெண்டா மரைமலர் மீதே மடவனம் வீற்றிருக்க
வண்டாடு வாவி வளர்முட்ட வேனன் வரவுரையே. கஅ.

ஆசிரிய விருத்தம்.

வரங்குலவு திண்டிகிரி யுங்கதையு மஞ்சிலையும்
வளையு மொளிர் வாளு முடையாய்
பரங்குலவு நின்னடி தினங்கொளு வனங்கசர
பந்தமெனி னுந்தி யருண்மா
திரம்புரைய வெம்பகட துந்திவரு நஞ்சுவளர்
தென்புலவ னஞ்சு மடியன்
றிரம்பெறவ ரந்தருதி யெம்பரம முட்டம்வரு
தென்றிரு வராக விறையே, ககூ.

ஆசிரியப்பா.

இறையு நிலையுறா தலையு நெஞ்சே
வாழி யீதொன்று வகுப்ப னின்று
கொள்ளா யத்தைத் தள்ளா விளையு
ணன்னா டதனு ணற்குலப் பிறவி
யுற்றா மன்றே யதனா னுறுபயன்
செய்குறா தரிவையர் திறத்து மன்ற
நஞ்சுபொதி கொங்கை விஞ்சிடு நயன
வலையிற் சிமிழ்ப்புண் டொழிந்தாய் புலையார்
பூளையு நீருங் குறும்பியு மீளுஞ்
சளியுங் கோழையும் வளியு மலமுஞ்
சலமுஞ் சீயு மலிவுற் றிழியு
முறுப்புக ளமைந்த வுடறான் வெறுப்பமை
யெழுவகைத் தாதுவி னியன்ற விறைச்சிக்
குவையிது சுகந்தருங் கொள்கைத் தேகொல்
மங்கையர் பொருட்டான் மாந்தர்க்கு மரண
மெய்துமிச் செய்கை வாலிபாற் காண்டியென்
றறிவிறை யுரைத்த வருண்மொழி பாராய்
எழில்கா ணேக்கறச் செய்த தெனபையேல்
கொங்கையே யாதி குலாவுற வமைத்த
தோற்றுருத் தியினைப் போற்றிடு வாயே
யிருவினைக் கீடா வருமறை வேதா
பிடித்துப் போகட்ட பிண்டஞ் சதமெனக்
கருதல் வேண்டா நண்ப வொருநீ
யிடையறா வின்பத் திருக்க விழைஇய
வென்னொடு மின்னே வருதி பொன்னகர்
வதிதெனச் சிறந்து வளர்சீ முட்டத்
திருப்பதிக் கேகித் திருக்குளத் தாடி

செம்பொற் கோயிலிற் புக்கு வலம்வந்தாங்
கேன வுருக்கொண் டினிதா யமர்ந்த
ஞானப் பிரானி னுண்மல ரடிகளை
வணங்குபு வாழ்த்தி யணங்குபுகழ் பாடி
யாடியத் திருவி னருளா லென்றுங்
கேடிலோ மாகிக் கிளர்துங்
கூடி னுறுபயனுடின்வே றிலையே. உ0.

வெண்பா.

வேதமே தானாய் விளங்குவா னெண்மார்பிற்
ருதவிழுமந் துளவத் தாமத்தான் — மாதவன்
போதார் பொழின்முட்டப் பூவரா கன்னடியே
வேதா முதலெலவர்க்கும் வீடு. உக.

கட்டளைக்கலித்துறை.

வீட்டிற்கு நாதன் விரும்பு மவர்க்கு விரைந்திடுவோன்
கோட்டிற் றுகளெனக் கோவினைத் தந்தவன் கோலப்பிரான்
கோட்டற்கு வாராக் குலமறை யென்னக் குலவுதமிழ்ப்
பாட்டிற்கு வந்தான் படிபுகழ் முட்டப்பதியவனே. உஉ.

ஆசிரிய விருத்தம்.

அவமனிசர் சிலர்கண்ண னவதார வைபவங்க ளரியாராகிப்
பவம்பலவுற் றலமந்தா னெனத்தெய்வப். பழிப்புரைத்துப்
(பவத்திலாழ்ந்தா
ரவனியுயி ரளிப்பவன்சி பார்க்குண்டென் பதையளவை
(யாற்றினுய்ந்தே
மெவன்பெரிய னவன்முட்ட விருங்கேழ லென்றுணர்ந்தே-
(மேத்து வாமே. உங.

ஆசிரியப்பா.

எத்துடை யாள ரிசைமருங் கியலப்
பூத்த செல்வத்துப் பொலிவொடு தவிசி
னாவலந் தண்பொழி னண்ணா ரோட்டி
யொருபெருங் குடையி னரசுபுக் கிருந்த
சத்தி யுமநன் மெத்திய வூழி
னுண்மாண் புலனி னோக்கில்லாது
விழுப்பொரு ளுணரும் வேத நாவன்
மாசற விமைக்கு மேனியி னாசற
நோற்றுவர லுண்டி யாற்ற லுடலகம்
விளங்கிய வென்பின் றுளங்கிய காட்சி
யவத்துறை கழூஉந் தவத்துறை மருங்கின
னணிமாண் டவியனைப் பேணிமாண் படையான்
கழுவிடை யுய்த்தலிற் கெழுமிய பவத்தைக்
கழுவிய வொருவன் முழுமுத லறிவின்
கசற விளங்கு மேசறு கோலத்
துருக்கொ டிலகுறாஉ முயர்பதி யதுவே
திமுட்ட மென்ன நீமுட்ட வெண்ணி
வளமலி சிறப்பி னுளமினி துறைந்தி
பயர்வுறு பிறவி யடையா
துயர்கில யுலகந் துயரிகந் திறவே. உச.

வெண்பா

வேலாழி சூழுலகின் விம்முற் றுழலாது
பாலாழி நாதன் பதந்துணையா—மாலாழி
நீந்தி நிலனடைய நேர்கிருட்டி சேர்முட்டம்
போந்தின் புறுக புகழ்ந்து உரு.

கட்டளைக்கலித்துறை

புழைக்கைக்கருநெடுந் திண்கோட்டு மாவொன்றுபுன்கணுழந்
தழைக்கைக் குறுபொரு ணீயென் றுணர வறிவித்ததால்
பிழைக்கைக் கவனி கொடுமுட்ட மேவெம் பிரானுலகு
தழைக்கைக்கு நின்னுந்தி தந்தசெந் தேன்வரு தாமரையே

ஆசிரியவிருத்தம்

வழங்குதிரை யடலாழி யுடலரவி லரிதுயில்கொள்
வண்ண நீவி
முழங்குமறை யவதரித்த திருப்பவள முளரிமலர்த்
தவனி மாது
பழங்கணுறு வகையருள வொருகேழற் படிவமதாய்ப்
பரவி நாளுந்
தொழுங்கையவர்க் கருள்புரியுஞ் சீமுட்ட நாதனடி
தொழுவா மன்றே ௨௭

ஆசிரியப்பா

தொன்னிலை மரபின் முந்நீ ருடுத்த
நன்னிலை யுலகத் தந்நீர் நுண்டுளி
யெனலாச் செறிவுறாஉ மினப்பொரு ளுணரி
னிருதிணைப் பாற்பட் டியங்குறு வனவே
யவைஃறி வுள்ளன வில்லன விருபா
லாயினு மைம்பொறி யவாய்நிலைப் பட்டுச்
சாய்வுழி வருமின்பு சார்குந சிலவே
யிடுக்கண் பெரிது மடுப்பன சிலவே
யொன்றே யொருபகல் துன்றிய வின்பினின்
பின்றைப் பகலே பெருந்துன் பெய்து

மின்னலி லொருபக லெய்திய வொன்றே
பின்னதன் மறுதலை பிற்பக லுறாஉங்
கவ்வைகொள் ஞால மிவ்வியல் புடைத்தே
வாழிய மனனே வகுப்பன கேண்மதி
பெருகலுஞ் சிறுகலும் பிணியிடை யடைதலு
மறியா வுலகொன் றறிவுற வரிதாய்
மிளிர்வுறு மென்ன வளவில்பல் கலைகளும்
வாய்ப்பறை யறைதல் வல்லார் வாய்ப்படூஉ
மவ்வுழி யடைத லவாவினை யாயிற்
செவ்வழி நின்று செப்புவன வோர்தி
பெற்ற பெரும்பொருள் பலர்கை யதுவே
யுற்ற விளமை யொருங்குநில் லாமைப்
பெற்ற வுருவிற் பிறங்கப் பெற்றனை
சொற்ற வியாக்கை சூழ்ந்த முன்னோரி
னிற்றென மலைவிளக் கியலி னறிந்தனை
யாடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாப்
பீடுடைத் தென்ற பெருமொழி யதாஅன்று
"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பெ"ன வுணர்ந்
தூனுடம் பருத்தி யுளபகல் கழியா
தறிவு தலைக்கொளீஇ யரவணை யமலன்
பெருமுது கோலத் தொருபெருங் கோட்டிற்
றரைகொடு வெளியில் வருபெரு முட்ட
நன்னக ரிறைஞ்சி நாமம் பன்னி
யின்னலி னொருவி முன்னுதி
யந்நிலை யன்றி யடைவழி யிலையே.

வெண்பா.

இலையா லுறுங்குழவி யேனவுரு வாகி
யலையாமை தந்திங் கவனி—மலையாம
லெவ்வுயிருங் காண வெழுந்தருள் சீமுட்ட
மவ்வுழிச்செல் லுள்ள மறிந்து. உகூ

கட்டளைக்கலித்துறை.

அலராழி யான்றிரு முட்ட வராக னடியிணைக்கன்
பிலரா யினர்வினை போலிறு மாந்தெதி ரேற்றுவிம்மிப்
புலரா விரவாய்ப் புலிவழங் காரிடைப் போதலினு
லுலரா விழிபொழி நீயென்றன் வல்லி யொருமகட்கே.

ஆசிரியவிருத்தம்.

மகவா யகஞ்சென் மறையரெலா மன்னுகுரவர் பரம்பரையிற்
றகவாய் நினையா தியிற்புகலச் சாந்தீ வன்பாற் றருங்கல்வி
மிகவாய்ப் பயின்று குரவர்கடன் விரும்பி யளித்தா யென்ப
பகவாமதிமருட்டும் முட்டப் பதியா யறிய விதியாயே [ரது

ஆசிரியப்பா.

விதிமுறை யறிஞர் புதுவிருந் தயரத்
துதிகொடு மாறன் றுலங்குற வருளிய
வுத்தம ஞானமென் றொளிர்தமிழ் மறையாம்
புத்தமு தார்ந்த வித்தக நிற்குத்
தகவல வென்றோ வகநெடும் புணரி
தருமொரு மணியுந் திருவரு மகளும்
வருபெரு மேனியின் வர்புற வணிந்து
பெரும்பெய ரமுதம் விரும்புநர்க் கீந்த
வரம்பொழி புகழோய் மகிழ்ந்த நின்குண
மெதிரியோ சறத்தின் மூதிய ரல்லதை

கொடுமுள மணியு மடுசினத் தினரே
வடுவி லறத்தின் வாய்ப்பட் டிலரே
மறுபிறப் பில்லெனு மடவோ ரேயெனு
வின்னோர் நின்னிழ லிகந்தோ ராதலிற்
கொன்னென் றிரப்பவை யாஅம் பொன்னும்
போகமு மல்ல வாக வறனு
மன்பு நின்மாட் டாத லருடி
மன்பெருஞ் சிறப்பின் மலிசீ முட்டத்
தொல்லுறு மேனத் துருவா
மெல்லுறு திகிரி புல்லுறு வோயே. கூஉ

வெண்பா.

புங்கந் தவிர்குரம்பைப் புக்கு ளிருணீக்கித்
துங்க வறிவுச் சுடர்க்கொளீஇ—யங்க
ணிறைவுருவே யம்முட்ட நேரேண மாக
வறிவுறுவா ரந்தாமத் தார். கூக

கட்டளைக்கலித்துறை.

ஆரணங் காணகி லானெளி வந்திட ராலழைக்கும்
வாரணங் காத்தவன் பொன்விழி யானுயிர் வாங்கியுறை
சீரணங் காமுட்ட நற்பொழி லாடவொர் செம்மலளித்
தாரணங் காமிவட் காமென வேரியந் தண்டுளவே. கூச

ஆசிரியவிருத்தம்.

தண்டுளி சிதறு மாழிசூழ் கிடந்த தரணியர் வையுநினதுந்தி
வண்டுவாய் கிண்டு மரைமலர் மலர மற்றதன் வாய்வழி வரலாற்
பண்டுனையுண்ட படிமடி யினனுய்ப் பகருரைப் பயனறிந் துய்ந்தேன்
விண்டுகொண் டலையார் தண்டலை யுடுத்த விளங்குசீ முட்டமாயவனே

ஆசிரியப்பா.

மாதவை தன்னு ளாதர வின்றி
யோதிட வறுவை யுதவிய பகவ
வையாண் டளவிற் கையா றுந்த
ஆனமில் பெரும்பதந் தானணி வேட்டு
மாதவம் புரிந்த தீதகல் துருவற்
குலவா வுலகம் பொலிதர வளித்தோய்
பல்லுயிர் வகுத்தனை பாங்குற வியற்றினை
யல்லியங் கமலத் தணங்கமர் நிறத்தினை
பொன்புனை யுடுக்கை மின்னிய வரையினை
நாற்றமிகு சிறப்பி னாற்றிதழ்க் கமலத்
தேற்றங் கொடுத்த வெழின்மிகு மடியினை
புள்ளூர்ப் பணிக்கு முனைவ நீயே
பன்னூற் கடந்த பொன்னணி நேமி
வலங்கொண் டேந்திய பொலம்புட் கொடியோய்
புகழ்வார் புகழப் படுவார் புகழ்பொரு
ளியாவுநீ யென்ப தாவயிற் கனலப்
பல்பொரு டோறும் பரந்த பண்பினை
கருவளர் வானமு முருவளர் வளியுஞ்
செந்தீச் சுடரு மந்தீம் புனலும்
நிலனொருங்கு புணர நின்மருங் களிக்கும்
பூதத் தொகுதிப் புணர்ப்பொ ரூழியிற்
கேழற் கோலத் தொருபெயர் கிடப்பப்
பாழிக் கோட்டிற் பரித்தனை யன்றே
கெடுவில் கேள்வி வடுவில் கொள்கை
யங்கை நெல்லியிற் றங்குநூ லறிஞ
ரைவகை தம்முளு முய்வகை பெறுவ
தருச்சையி லென்னும் விருப்பினைப் புரப்ப

னவ்வவ தாரத் தெவ்வமி லுருவிற்
பேதந் தபுத்தனை யோதசி முட்டத்
தூழிதொ றூழி யுலவும்
வாழி முதல்வநிற் பேணுநுந் தொழுதே. ௩௬

வெண்பா.

தொழும்ப ரினத்தலைவன் தூக்குந் தொடர்பா
லெழும்பரிசு தந்தா ளிறைவ—செழும்பிரள
யத்தா விலைக்குழவி யாமுட்ட வேண்வுருக்
கர்த்தா நினது கழல். ௩௭

கட்டளைக்கலித்துறை.

கரணந் தவிர வெழுவிக்குள் கான்று கலக்குமந்த
மரணந் தனின்மனை யாதியர் சூழ்ந்து மயக்குறப்பர்
முரணந் தணிவயற் சிமுட்ட வென முதல்வ நின்றாட்
சரணந் தனையடைந் தேனந்த ஞான்றருள் தண்ணளி
[யே. ௩௮

ஆசிரியவிருத்தம்.

தத்துவ நிலையி லொருசிறு கணனுந் தரித்திடா
திடும்பைகூ ருடலம்
பொத்திய வைவாய்ப் பொறியெனு மரவப்
பொங்கழல் விடம்புலங் கொள்ளச்
சித்தமா லாகி வேதனைக் கடலுட்
சிவனுவேன் புணையிலா தடைசென்
மத்துயர் களையாய் மலிபுகழ் முட்ட
மாண்பமர் ரேன்மா தவனே. ௩௯

ஆசிரியப்பா.

தவலறு முலகிய லுவலுக் காலை

முறையுளி முத்திறப் பகுதி யிகவா
தறமுத லருத்திய தெய்வமு நிரலே
பொருளின் பகுதியிற் புணர்த்திய தெய்வமு
மின்பப் பகுதியி னிருத்திய தெய்வமு
மெனவிவை முதல்ர் வியலுளு மவற்றுள்
வன்னியிற் சூடென வயங்கி யுவர்தம்
மனக்கருத் தார்த்தித் தனக்கென வொருசார்
பின்றியெப் பொருட்கு மியன்ற சார்பென
நின்ற வொருசுடர் நின்ற னிச்சையி
னூட்டென யாவையுங் கூட்டி யுலகிற்
றன்னினும் பிறவினுந் தேவினுந் தொன்னூறு
முத்திறத் தாப மொய்த்துறு வோர்தமக்
கெய்த்துநீர் வேட்கை யிலம்பா டுடையன்
றண்ணீர் நாடித் தலைப்பட் டாஅங்
கெண்ணிநின் னடைமா றியலுரு விலக்
முந்நீர் முகிலெனு மந்நிற மதாஅன்
றன்ன தாற்ற லருநீ ரளிக்குநர்
போன்மென நீருட் புணர்ந்தனை யன்றியும்
அரணமக் கென்ன வறிவரக்ங் குறிக்கும்
பிரணவச் சிரமுடை யிருநா லக்கர
மெரிவ ரென்ன நண்ணிய மயக்கத்
தமர்புரி யேனென் றவனுரை விடுத்துச்
சமர்புரி யதனுட் டத்துவ வொளியான்
மனவிரு ளிரிய மாற்றிய தினமணி
பெரியதிற் பெரிதாய்ப் பிறங்கி யினியிலை
சிறிய தென்னச் சிறிதாய்ச் சிவணி
யிருபா லனந்தென வியம்புதத் துவங்க
ளாதி றுய் சிறப்பி னுரிமைய தென்ன

விசிட்டாத் துவித வியனிலை கிளர
வசித்துசித் தாத்தும வடைவுட னின்றோய்
முன்னூறு நாலுண் முதனூ லென்னவு
மநாதியி னின்றெனப் பமைவ தென்னவு
நல்லுயி ரறியப் புல்லுநின் னருளின்
மறைதர மற்றது நிறைவுற நின்றது
பரந்தவா லறிவின் பயனறி கோடல்
வல்லுந ராய வடமொழி யாளர்க்
கொல்லுவ தாமெனச் சொல்லிருந் தமிழின்
வகுத்தமைத் தளித்த வருளா பரண
ராதிய பதின்ம ரவர்முத லாகப்
பழித்த தொழித்த பழுதி லருந்தவர்க்
கருளலோ வுன்ன வரிதல வெளிதே
செயற்கரிய செய்வார் பெரிய ரம்ம
அறக்கழி வுடையன திறப்பட வாற்றிக்
காமம்நிம்பிரி யடுசினங் கடிந்த
வேமமில் படிறு மிவைமுதல் வலையிற்
சிமிழ்ப்புண் டழுக்கே விழுக்கா டென்ன
வவிழ்ப்புண் டியங்கு மருவழி யறியா
தொருதிறம் பற்றா தோடி யோடிச்
சூறா வளியிற் சுழல்கறங் கென்ன
வலமர லுடையே னருட்சிறி துதிப்பத்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகிப்
பலகலை தம்முளு மிலகுற வாழி
நினக்குவகுத் தமைத்த பெயரொன் றின்மையின்
மனக்குவந் தனசில தனக்கென வலந்த
நான்மணி மாலையும் பான்மையிற் றழீஇப்
பொருளெனப் புனைந் தருளலோ பெரிதே

நால்வே றியற்கைப் பால்வரு வோரு
மொன்பதிற் றிரட்டி யுயர்கண முதலா
வேவருங் குழுமித் தேவர் கோவெனப்
பழுத்த வன்பிற் பயமுறை கொண்மா
றனவிடைப் படூஉ மரக்கினை மான
வகநெக வுருகி மிகவலம் பரச
வருளென வொருபொரு ளிணங்கு மணங்கும்
பொருள்பொறை யென்னப் பொதியோ ரணங்கு
மானந் தத்தி னார்த்திடு மணங்குந்
தன்புடைத் திகழ வின்புடைக் காட்சியிற்
பூந்துழாய் கமழு மேந்தெழி லாகத்
தொருபெருங் குருமணி யருகிறத் தொளிர்தலின்
றத்தலை வெண்பா லாழியி னத்தலைப்
பைத்தலை யரவின் பாய லொருவி
முத்தக் காசை முன்னினை யாகிப்
பெயரள வொன்றென வுயர்பெறு மேனத்
துருவொடு முட்டத் துறைதலுந் தகவே
நித்திலங் கொழிக்கு நீடிரை தழீஇய
மலர்தலை யுலகி னிலகுற நின்பான்
மாயை வித்தின் மருவிய முக்குணத்
தேய பராஅரையின் மேயவீ ரைந்து
சினைவிடுத் தெவையும் வினைதரு வேட்கை
வேர்பல பொதுளி வினைப்பயன் கனிந்த
வொருபெரு மியாக்கைத் தருமிசை யதனுட்
சீவ னென்னச் சிவணிய வொருபுள்
ளருந்துதல் காணூஉ விருந்த வந்நிலை
நின்னிலை யென்பர் நெறிமாண் டோரே
யாதலி னீயறி யாதிலை யதனா
லுரிதுநின் கரியி னுளுற்றுறு தொழிலா
னினைவார் நினைவ நினைவின்
மனமார் தருநின் றனதருட் பூவே. ௪௰

முற்றும்.

அரும்பதவுரை.

எம்பெருமானார் துதி.

நெஞ்சே! ஆழிவளாகத்து மறை மயக்கேனோருமறிய, இறை மயக்கமாய இருள்நீத்து ஆழியான் தெய்வமென்னும் முறைவிளக்கும் ஒளி இராமாநுசன் எனக்கூட்டுக.

கலைமகள் துதி.

புந்தியாகிய பாற்கடலுள் தாளாகிய மத்தை செந்தமிழாகிய அமுதம் எழக் (கடையும் பொருட்டு) நாட்டுதும் என்க.

நூல்.

(க) 1. இனன்-சூரியன். 2. மரை, முதற்குறை. 3. கள்நீர் எனவும், கண்நீர்எனவும் பிரிக்க. 16. துலாய-குலவிய. 20. புலவர்-தேவர். 24. கோலம்-வராகம், உரு. 34. அல்லல்-வருமை. 43. கருவூர்-கருப்பமாகியவூர். 48. எழுவாய், இறுவாய்-தோற்றம், முடிவு. 50. அறப்பல-மிகப்பல. 63. புலிக்கோட்பட்டான் என்பதுபோல அவாக்கோட்பட்டேன் என்பதும் ஒருசொல். 64. ஆஉரி-பசுத்தோல்.

(எ) மைந்தன்-பிரமன். இபராசன்-கசேந்திரன். எண்ண, இடைக்குறைந்தது.

(அ) 6. அரந்தை-துன்பம். 24, 25. குற்றியலுகரம்-இயல்புவிதி பெற்றது. தருமம் நிலைபெறற்பொருட்டு. 33. பொற்கணன்-இரணியாக்கன். பூமின்-நிலமகள்.

(கம) இது "இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்" என்னுந் துறை. நல்லனவற்றுள் முரான்றவண்டு, அல்லனவற்றுள்ளும் முரன்றுங்கு என்னொடுங் கூடியொழுகுந் தலைவன் பரத்தைமாட்டுங் கூடியொழுகுகின்றனனென உள்ளுறையாற் கூறினளென்க.

(கக) அன்னை-சீதாபிராட்டி. பின்னை-இலக்குவன உட்கொளாது, கொண்டது-மனத்தானங்கீகரித்தது. அத்தம்-பொன். கைபுமாம்.

(கஉ) 2. அத்து-அசை 9. கருப்பொதி-கருப்பமாகிய சுமை.

(கச) இது 'நெஞ்சுவிடுதூது' என்னுந்துறை. எர்குன்ற-எழுச்சிகெட. அம்பு-(கண்)நீர்.

(கரு) இது நற்றாய் தோழியொடுகூறியது. உழையீராகிய 38. கண்ணீர். 1. என்க. 16. மலையொடுஎன உருபுவிரிக்க. கருமலை-இராவணன். 33. கலை

அரும்பதவுரை.

நீத்து- தானையைநீத்து. அவன் கலைபெற்றனள்- அவனாற் கலைக்கப் பெற்றனள். "தற்போதமழிந்து தலைவன் வசமானாள்என்பது இதனாற்போந்த பொருள்."35.நிரனிறை. 36. முல்லை-உவமையாகு பெயர்.

(கஎ) குறியெதிர்ப்பை-அளவுகொடுத்துவாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது. குவளைவு-உலகில் பிறந்திறந்துழலல்.

(கஅ) இது"மேகவுடுதூது" என்னுந்துறை.

(உ0) 17. அறிவிறை-இராமபிரான். (கம்பர்) 21. ஈடாக.

(உஉ) கோ-உலகு. சோட்டல்-எழுதுதல்.

(உகூ) அறிவித்தெ,நன்னும் பப்னிலைக்குத் தாமரை எழுவாயாக நின்றது.

(உஅ) 4. உயர்திணை, அஃறிணை என இருதிணை. 5.பால் -பகுப்பு. 6. அவாங்நிலை- அவாவும் வழி. 12. மறுதலை-துன்பம். 21. பலர்கையது-பலரிடத்து முடையது. 34.சுயம்புத்தலம்.

(உகூ) ஆல் இலை என்க. உள்ளம் விளிப்பெயர்.

(ங0) இது "இரவுக்குறிமறுத்து வரைவுகடாவல்" என்னுந்துறை. ஆரிடை-அரியவழி. போதல்-வருதல்.

(ஙக) மகவாய் – யாகத்திடத்து.

(ஙஉ) 7. வாய்-ஏழனுருபு. 10. எதிரியோர்-எற்றுக்கொண்டவர். அல்லதை, ஐசாரியை, 11. கொடும் உளம்-கொடிய மனது.

(ஙங) அந்தாமம்-பரமபதம்

(ஙச) இது "அறத்தொடுநிலை" என்னுந்துறை.

(ஙகூ) 2. அறுவை-உடை. 8. நிறம்-மார்பு. 21. புணர்ப்பு-கட்டு. 22. கேழற்கோலத்தொருபெயர் - ஸ்வேதவராக கற்பம் என்பது. 24. ஐவகையாவன- பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம். அந்த (விபவத் திடைப்பட்ட) வராகவதாரம்.

(ஙஎ)தொழும்பர்-அடியவர். தூக்குந் தொடர்பால் எழும் பரிசு-' என்பதற்குச் செய்யுள் முறையர்கச்செய்யும் தன்மை எனவும், சம்சாரத்தினின்றும், ஜன்மபரம்பரைகடோறும் திரட்டிய புண்ணியவசத்தா

அரும்பதவுரை.

ல் எடுக்கும் தன்மை எனவும் இருபொருள் கொள்க.

(சW) 2. முத்திறப்பகுதி-அறம் பொருளின்பங்கள். இகவாது-கெடாது. 6. அவற்றுள்-அத்தெய்வங்களுள். 7. உவர்-என்னுஞ்சுட்டு விரும்பியவரை யுணர்த்தும். 10. சுடர், விளி. 12. முறையே ஆதியாத்துமிகம், ஆதிபௌதிகம். ஆதிதெய்விகம் என்பர் வடநூலார். 16. அடையுமாறு. 21. சிரம்உடை-ஆதியாக உடைய. 44. அற-மிக. 45. நிம்பிரி-பொறாமைதோன்றும் குறிப்பு. கடிந்த என்பதை ஒவ்வொன்றிற்கும் கூட்டுக. 58. நால்வேறியற்கைப்பால் வருவோர்-முப்பத்துமூவர்:—ஆதித்தர், உருத்திரர், வசுக்கள், அச்சுவினிதேவர் என. 64. ஸ்ரீதேவி. 65. பூதேவி. 66. நீளாதேவி. 72. முத்தக்காசு-கோரைக்கிழங்கு. (அப்பெருமானுக்கு ரேவதிநாளில் கோரைக்கிழங்கு நைவேதித்தல் இன்றும் நடைபெற்று வருகிறது).

சுடர்! (10) அக்கர: (21) தினமணி: (25) நின்றோய்! (31) அன்நிறம் (உடையை) அதா அன்று (17) புணர்ந்தனை. அன்றியும் (19) ஒளிர்தலின் (69) முன்னிணையாகி (72) ஒருவி (71) உருவொடு உறைதலுந்தகவே. (74) நின்றனதருட் பூமனமார்தரும். (80) ஆதலின். (85) அருளல் எளிது (42) தழீஇ (56) அருளல் பெரிது. (57) எனக்கூட்டி முடிக்க.

முற்றும்.

பிழைதிருத்தங்கள்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
8	15	உ	ந
9	3	மால	மாலே
	13	காரின	காரின்
11	4	வரெ	வரோ
13	14	ரின்ற	நின்ற
15	17	னெரி	னெறி
	19	னின்ற	நின்ற்
16	20	ன தது	னத்து
	22	மேமாலொரு	மேலொரு
19	20	ளரி	ளறி